தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள். சென்னை-06

ந.க.எண்.41779/சி4/இ1/2021 நாள்.17.11.2023.

-----

| | |
|---|---|
| பொருள் | தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப்பணி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட்டு பணி மாறுதல் செய்து ஆணை வழங்கப்பட்ட ஆசிரியர் பயிற்றுநர்களை பணி விடுவிப்பு செய்யக் கோருதல் - தொடர்பாக |
| பார்வை | 1. அரசாணை (1டி) எண். 134 பள்ளிக் கல்வி (பக5(1)) த் துறை நாள்.18.08.2021<br>2. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரி (பணியாளர் தொகுதி)ன் செயல்முறைகள். ந.க.எண்.41779/சி4/இ1/2021 நாள்.20.10.2021<br>3. சென்னை உயர்நீதி மன்ற (மதுரை கிளை) தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனு எண்.699 /2022 மற்றும் தொகுப்பு வழக்கு தீர்ப்பாணை நாள்.07.11.2023. |

-----

பார்வை (2) இல் காணும் செயல்முறைகளின்படி ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட்டு பணி மாறுதல் செய்து ஆணை வழங்கப்பட்ட ஆசிரியர் பயிற்றுநர்களால் சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது. சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட பார்வை (3) இல் காணும் வழக்கு மேல்முறையீட்டு மனு மீது வழங்கப்பட்ட தீர்ப்பாணையின் செயலாக்கப் பகுதியில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

28.The service conditions of the teaching staff are not violated on account of the transfer orders passed by the competent authorities. Thus, we find no reason to confirm the relief granted by the learned Single Judge in the order impugned. Consequently, the impugned orders dated 24.11.2021 and 28.01.2022 passed in W.P.(MD) Nos.16884 of 2021 and 1499 of 2022 are quashed and the Writ Appeals filed by the State in W.A.(MD)Nos.699 and 1164 of 2022 are allowed and the impugned order dated 24.11.2021 passed in W.P.(MD)Nos.19707, 19710, 19708, 19709, 19712, 19711, 18709, 18796, 18705, 18706, 18707, 17358,18708 and 16884 of 2021 is confirmed and the Writ Appeals filed by the writ petitioners in W.A.(MD)Nos.2230 to 2242 of 2021 and

1966 of 2023 are dismissed. No costs. Consequently, connected miscellaneous petitions are closed.

எனவே பார்வை (2) இல் காணும் செயல்முறைகளின்படி ஆசிரியர் பயிற்றுநர்களுக்கு பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட்டு பணி மாறுதல் செய்து ஆணை வழங்கப்பட்டது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கில் தடை ஆணையின் அடிப்படையில் பணிவிடுப்பு செய்யப்படாமல் உள்ள ஆசிரியர் பயிற்றுநர்கள் மற்றும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கினை தவிர்க்கும் பொருட்டு மாற்றுப்பணி வழங்கப்பட்டு மாற்றுப்பணியில் பணிபுரியும் ஆசிரியர் பயிற்றுநர்களை பார்வை (3) இல் காணும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் தொடரப்பட்ட வழக்கு மேல்முறையீட்டு மனு மீது வழங்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில், உடன் பணிவிடுப்பு செய்திட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்படுகிறது.

பள்ளிக்கல்வி இயக்குநர்
18/11/23

17/11/2023

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்